# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.11 இந்த அழைப்பு

**வேத வசனம்:** **இயேசு அவர்களை நோக்கி: என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.**
*மாற்கு 1:17*

**அறிக்கை:** **கர்த்தராகிய இயேசு என்னைப் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்க அழைத்திருக்கிறார்**



**சத்தியம்:** இயேசு சொன்னார்: ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கிப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

### வேத பகுதி: மாற்கு 1:14-20

**பாடம்** **1. தேவன் உன்னை அழைக்கிறார்:** பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி சாமுவேல் தன்னுடைய சிறிய வயதிலேயே தேவனுடைய அழைப்பைத் கேட்டார். உடனே அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் தேவனால் மிக வல்லமையாக பயன்படுத்தப்பட்டார். இன்றும் தேவன் சிறுபிள்ளைகளை தம்முடைய பணிக்கென்று அழைக்கிறார். அந்தச் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருக்கு பணிசெய்ய நம்மை அற்பணித்தால் அவர் நம்மை மிகச் சாதாரணமான நிலையிலிருந்து உயர்த்தி அசாதாரணமான வாழ்க்கை வாழும்படிச் செய்வார். (ஒரு பெரிய தர்பூசணிப்பழம் மிகச் சிறிய விதையிலிருந்து வருகிறது என்பதைச் சிந்தித்துக்கொள்). வேதம் சொல்லுகிறது "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை". (1 சாமுவேல் 3:10-14, 1 கொரி. 2:9)

**2. மிகப்பெரிய கட்டளை:** இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களிடத்தில் இப்படிச் சொன்னார்: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்". இது தேவன் நமக்கு கொடுத்த பெரிய பொறுப்பு. (மத்தேயு 28:18-20)

**3. அறுவடை மிகுதி:** "இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து... அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி..." இன்னும் அநேகர் கிறிஸ்து இயேசுவை அறியவில்லை என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. அவர்கள் மெய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல உதவியற்றவர்களாகவும் துன்புறுத்தப்படுகிறவர்களாகவும் நம்மத்தியில் காணப்படுகிறார்கள். அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ மிகவும் கொஞ்சம். ஆகையால் நீங்கள் புறப்பட்டுச் சென்று அறுவடைச் செய்ய வேண்டும். (அறுவடை என்ற வார்த்தை உலகம் முழுவதிலும் காணப்படும் தொலைந்துபோன மனிதர்கள்). (மத். 9:36-37)

**4. மிகுந்த மகிழ்ச்சியான பணி:** கர்த்தருடைய பணி சலிப்பை உண்டாக்கும் பணி அல்ல. மாறாக அது உற்சாகமிக்கது. ஜான் நியூட்டன் என்பவரைப்பற்றி பாடம் 2:4 ல் படித்தோம். அவர் தேவனிடமிருந்து ஒரு புதிய வாழ்வைப் பெற்றுக்கொண்டு தேவனுக்குப் பணிசெய்யவும், அவருடைய வார்த்தையை பிறருக்குக் கற்பிக்கவும் தன்னை ஒப்புக்கொடுத்தார். தேவனுக்கு பணிசெய்யும் மகிழ்ச்சி என்பது ஒவ்வொரு நாளும் நம்முடைய பிறந்தநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது போன்றது.

**5. மற்றவர்கள் இயேசுவை அறிந்து கொள்ள உதவுதல்:** மனிதர் அனைவருடைய வருத்தங்களையும், உதவியற்ற நிலையையும், பாவங்களையும் நீக்கி அவர்களை மேலே உயர்த்த இயேசுவால் மட்டுமே முடியும். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்". அதனாலேயே மற்றவர்கள் கிறிஸ்துவை அறிய அவர்களுக்கு உதவி செய்வது மிக முக்கியமான பணி. (எபேசியர் 2:4-6, அப். 4:12)

**முடிவுரை:** தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலையைச் செய்ய தங்களை ஒப்புக்கொடுக்கும் மனிதரை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். அவர் மிக விரைவாக திரும்ப வருகிறார். அவர் வந்தபின்னர் சுவிசேஷ செய்தியை அறிவிப்பதற்கும், கர்த்தருடைய சத்தியங்களைப் போதிப்பதற்கும் அவகாசம் கிடைக்காது.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.